# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF PROCEDURE)
## IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | புருஷோத்தமன் |
| Father's Name | காளிதாஸ் |
| Village | சி.எல். ரோடு |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | டெயிலர் |
| Age | 63 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **02.12.2025.**

**E.P.11/2025 in RCOP No.91/1995** **எ.ம.சா.1** **04.30 Pm – 04.42 Pm**

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுக்கடையை காலி செய்து சுவாதீனத்தை ஒப்படைக்க கடந்த 03.01.2025-ம் தேதி தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் எனக்கு இரண்டு மாதங்கள் காலக்கெடு காலி செய்ய கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 2024 செப்டம்பர் மாதம் ரூ.27,500/- தொகை செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது அந்த தொகையை செலுத்தி விட்டேனா என்றால் செலுத்தி விட்டேன். மேற்படி தொகையானது வாடகை பாக்கி என்றால் சரிதான்.

2. மனுக்கடையை சுவாதீனம் ஒப்படைக்கும் வரையில் வாடகை தொகையை தவறாமல் செலுத்தி வர வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கடந்த 2024 செப்டம்பர் மாதம் முதல் தற்போது வரை வாடகை தொகை செலுத்தவில்லை என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல மேல்முறையீடு செய்துள்ளேன். மேற்படி எந்த தேதியில் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை வக்கீலிடம் தான் கேட்க வேண்டும்.

3. மேல்முறையீடு செய்யப்பட்டதை காண்பிப்பதற்கு இந்நீதிமன்றத்தில் ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வக்கீலிடம் கேட்டுள்ளேன் கொடுப்பதாக கூறியிருக்கிறார். மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிலிருந்து 14 மாதங்கள் கடந்துவிட்டது, ஆகவே மேல்முறையீடு செய்துள்ளதாக நான் கூறும் சங்கதியானது வழக்கிற்காக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுக்கடையை காலி செய்யும் வரை

வாடகை தொகையை தவறாமல் செலுத்துவதாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு அபிடவிட் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை வக்கீல் இடம் கேட்டு சொல்கிறேன்.

4. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் ரூபாய் 400/- எனக் கூறியிருக்கும் தொகையானது எந்த வருடத்தில் இருந்து வாடகை தொகை என்றால் 1995லிருந்து ஆகும். நான் கூறுவது தவறு என்றாலும் இந்த நிறைவேற்றுமணக்கு சம்பந்தப்பட்ட வாடகை கட்டுப்பாட்டு மனுவானது முதலில் 1993 ஆம் ஆண்டு திருப்பத்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 1995 ம் ஆண்டு வாணியம்பாடி உரிமைய நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் எனக்கு 1995 ஆம் வருடத்தில் இருந்து தான் ஞாபகம் உள்ளது.

5. கடந்த 30 ஆண்டுகளாக மனு கடையில் லாபம் அடையும் நோக்கில் இருந்து கொண்டு காலம் கடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. காலம் தாழ்த்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக தான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதாக தவறாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தின் உத்தரவுக்கு எதிராக தடை உத்தரவு எதுவும் தற்போது வரை பெறவில்லை என்றால் சரிதான்.

6. இந்த நிறைவேற்று மனுவில் மனுதாரரின் கோரிக்கையின் படி மனுக்கடையை காலி செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் நீதிமன்ற உத்தரையின்படி காலி செய்ய நான் தயாராக உள்ளேன் மேல்முறையீடு செய்துள்ளதால் காலி செய்யாமல் இருக்கிறேன். மனுக் கடைக்கான வாடகை தொகையை செலுத்தாமல் நான் வழக்கை நடத்துவது நீதிக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறுவிசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.12.11 15:33:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.